# பொதுக்காலம் 21 ஆம் ஞாயிறு.

# திருவழிப்பாட்டு ஆண்டு B (23-08-2015)

## திருப்பலி முன்னுரை

திருமகன் இயேசுவில் புது வாழ்வு பெற்றுள்ள இறைமக்கள் அனைவருக்கும் இன்று ஞாயிறு வழிபாட்டில் பங்கேற்க அணியமாயிருக்கும் உங்கள் அனைவருக்கும் திருமகன் இயேசுவின் பெயரால் வாழ்த்துகளைக்கூறி மகிழ்கிறேன். இன்று பொதுக்காலம் இருபத்தோராம்ஞாயிறு. இன்றைய வழிபாடு இறைமக்கள் அனைவருக்கும் எல்லாமே இறைவன்தான் என்பதை உணர்த்தி இதைத் தெரிந்திராத மக்கள் அவரைவிட்டு அகல்கின்றனர் என்பதை நமக்கு சுட்டிக் காண்பிக்கிறது. நாமும் இன்று நமக்குத்தானே ஒரு வினாவை எழுப்பி ஆய்வுசெய்வோம். நமக்கு எல்லாமே இறைவன் தானா? இதை உணர்கிறோமா?

இறைவனுடைய இரக்கமும், வல்லமையும், அருளும் அவரிடம் அடைக்கலம் புகும் அனைவருக்கும் கிடைக்கின்றன. ஆண்டவர் கண்கள் நீதிமான்களை நோக்குகின்றன: அவர் செவிகள் அவர்களது மன்றாட்டைக் கேட்கின்றன. நீதிமான்கள் மன்றாடும்போது, ஆண்டவர் செவிசாய்க்கின்றார்: அவர்களை அனைத்து இடுக்கண்ணினின்றும் விடுவிக்கின்றார். உடைந்த உள்ளத்தார்க்கு அருகில் ஆண்டவர் இருக்கின்றார்: நைந்த நெஞ்சத்தாரை அவர் காப்பாற்றுகின்றார். கிறிஸ்துவுக்கு அஞ்சி ஒருவருக்கொருவர் பணிந்திருங்கள். என்னும் இறைவனின் செய்திகள், அவருடைய வார்த்தைகள் வழியாக இன்று நம்மை வந்தடைகின்றன. எனவே வாழ்வு தரும் ஆவியையும், நிலை வாழ்வையும் வழங்கும் இறைவனின் வார்த்தைகளை நாம் வாசித்து, தியானித்து, செபித்து, வாழ்வாக்கி இயேசுவோடு என்றும் ஒன்றித்திருக் கும் சீடர்களாயிருந்து, சாட்சிய வாழ்வு வாழ இத்திருப்பலியில் வரங்கேட்டுச் செபிப்போம்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

உளமார இசை பாடி ஆண்டவரைப் போற்றுங்கள். நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெயரால் எல்லாவற்றிற்காகவும் எப்போதும் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைத் தயவாய் கேட்டருளும்.

**வாழ்வின் ஊற்றாம் இறைவா,**
உம்மிடம் கொண்டுள்ள நம்பிக்கையால் நாளும் வளர்ந்து வருகின்ற உமது திருச்சபையினை வழிநடத்தி வரும் எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனை வரையும், உம் மீதான நம்பிக்கையில் உறுதிபடுத்திக் காத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**உண்மையின் உறைவிடமாம் இறைவா,**
உலகிற்கு நிலைவாழ்வு அளிக்கும் உமது திருமகனின் வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டவர்களாய் வாழ்ந்து, உலகெங்கும் உமது நற்செய்தியைப் பறைசாற்றும் தூதுவர்களாக விளங்கும் வல்லமையை கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் அளித்திட வேண்டு மென்று உம்மை மன்றாடுகிறோம்.

**நன்மைகளின் நாயகராம் இறைவா,**
எம் நாட்டு மக்கள் அனைவரும் உண்மை கடவுளாகிய உமது மேன்மையை உணரவும், பொய்மையின் இருளிலிருந்து விலகி உண்மையின் ஒளியாகிய உம்மைத் தேடி வரவும் தேவையான அருளுதவிகளை வழங்கிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**விடுதலை தருபவராம் இறைவா,**
தீராத நோய்கள், கடன் தொல்லைகள், மன வேதனைகள், பிரச்சனைகள் போன்றவற்றில் சிக்கித் தவிப்போர் அனைவரும், நம்பிக்கையோடு உமது உதவியை நாடவும், உம் இரக்கத்தால் அவற்றில் இருந்து விடுதலை பெற்று, வாழ்கின்ற உண்மை கடவுள் நீரே என்பதை அறிக்கையிடவும் உதவிட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**நிலைவாழ்வு அளிப்பவராம் இறைவா,**
உம் திருமகனும் எங்கள் ஆண்டவருமாகிய இயேசு கிறிஸ்துவின் வாழ்வு தரும் வார்த்தைகளில் நம்பிக்கை கொண்டவர்களாய், மாசற்ற, தூய வாழ்வு வாழும் வரத்தினை எம் பங்குத்தந்தை, அருட்சகோதரிகள், பங்கு மக்கள் அனைவருக்கும் தந்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**அடைக்கலப் பாறையாம் தந்தையே இறைவா!**
போதைப்பொருள், வீண் களியாட்டம், ஆடம்பரம், கலாச்சாரச் சீர்கேடு ஆகியவற்றிற்கு அடிமையாகி வாழும் அனைவர் மீதும் மனமிரங்கி, அவர்கள் புது வாழ்வு வாழ வேண்டிய அசீரை அளித்துக் காத்திட வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.